# இலங்கை நிலைமை மிக வருந்தத்தக்கது

## இந்தியா 'புதுநோக்கை' மேற்கொள்ளும் - வி. சி. சுக்ளா

இலங்கை இனப்பிரச்சனையில் இந்தியா ஒரு 'புது நோக்கை' மேற்கொள்ள விரும்புகிறது. இது தொடர்பாக இந்திய மத்திய அரசு புதிய யோசனைகளை தயாரித்துள்ளது என இந்திய வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்ளா நேற்றுத் தெரிவித்தார். இலங்கை வரும் வழியில் அவர் மதுரையில் நிருபர்களிடையே தமது இலங்கை விஜயம் குறித்து விளக்கினார். இலங்கைக்கு செல்கையில் எடுத்துச்செல்லும் தமது புதிய திட்டம் குறித்து மதுரையில் நேற்று முதலமைச்சர் மு. கருணாநிதியையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும் அவர் சொன்னார். இலங்கைக்கு நம்பிக்கையுடன் செல்கிறேன் அங்கு நிலவும் சூழ்நிலையை நன்றாகவே புரிந்து கொண்டுள்ளேன். இது மிகவும் வருந்தத்தக்க சூழ்நிலையாகவே இருக்கிறது. இச்சூழ்நிலை விரைவில் நிறுத்தப்பட வேண்டியது அவசியம் என அமைச்சர் சுக்ளா மேலும் தெரிவித்தார்.

— 04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 4-50

முரசொலி

முரசு 05 ஒலி 63 பிரமோதூத தை 16 (29-01-1991) செவ்வாய்

### இந்திய வெளியுறவு அமைச்சர் வரும் நாள் பார்த்து

# குடாநாடு அடங்கலும் அகோரத் தாக்குதல்!

## வங்கி ஊழியர் உட்பட நால்வர் பலி

கடந்த செவ்வாய்க்கிழமைக்குப் பிறகு சற்றே குறைந்திருந்த ஸ்ரீலங்கா விமானப்படையின் தாக்குதல்கள் நேற்று மீண்டும் உக்கிரமடைந்தன. இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்ளா இலங்கை வந்திறங்கும் சமயம் பார்த்து விமானப்படை குடாநாட்டின் பல பகுதிகளில் தாக்குதல்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கோண்டாவிலில் மூவா மரணம

நேற்று மாலை கோண்டாவில் மேற்கில் இருதடவைகள் குண்டு வீச்சு நடாத்தப்பட்டது. மூன்று விமானங்கள் தாக்குதலில் ஈடுபட்டன.

மாலை நான்கு மணியளவில் நடந்த குண்டு வீச்சில் குஞ்சன் (32) ஸ்தலத்திலும் அப்பன் (18) எனபவர் இடது கால் துண்டிக்கப்பட்ட நிலையில் ஆஸ்பத்திரியிலும் மரணமானார்கள்.

இரண்டாவது தடவையாக மாலை ஐந்து மணியளவில் மீண்டும் வந்த பொம்மர்கள் நான்கு குண்டுகளை வீசியதில் வீதியில் நின்ற இராமர் (62 பொற்பதி வீதி) பலியானார்.

குண்டு வெடிப்பு சத்தத்தில் திருமதி கணேசலிங்கம் (45) மயக்கமடைந்தார். புஷ்பராஜா (25) வலது காலை இழந்தார். கே. விஜயன் (22) கி. தியாகராஜா (41) ஆகியோர் காயமடைந்தனர்.

மாலை நடந்த தாக்குதலில் ஏழு வீடுகள் கோண்டாவில் மகாவித்தியாலயம் ஒரு கடை என்பன சேதமடைந்தன.

(ப10, 33, ப14, 74, 12)

## வல்வெட்டித்துறை, உடுப்பிட்டியில் பிற்பகல் பொம்மர் தாக்குதல்

வல்வெட்டித்துறை, உடுப்பிட்டிப்பகுதிகளில்நேற்றுப்பிற்பகல் 2. 30 மணியளவில் இரு பொம்மர்கள் தாக்குதலை மேற்கொண்டன.

இதனால் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி வகுப்பறைகள் சேதமடைந்துள்ளன. மாணவர்களின் சைக்கிள்களும் நாசமாக்கப்பட்டன. இங்குள்ள தேவாலய குருமனையும் சேதமானது.

இதேபோல வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியும் பெரும் சேதமடைந்ததுடன் அருகில் உள்ள வீடுகளும் பாதிக்கப்பட்டன.

(50,39,38)

## நல்லூர், இருபாலையில் தாக்குதல் பெண் வங்கி ஊழியர் பலி

நல்லூர் சட்டநாதர் வீதியில் நண்பகல் மேற் கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சினால் நான்கு வீடுகள் பலத்த சேதமடைந்ததுடன் பெண்மணி ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்தார். நல்லூர் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றும் சேதமானது.

பொன்னம்பலம் இராஜேஸ்வரி (வயது 37) என்பவரே ஸ்தலத்தில் பலியானவர் மக்கள் வங்கி ஊழியரான இவர் பதவி உயர்வுடன் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்றுவந்தமை குறிப்பிடத்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கண்ணாடித் தொழிற்சாலை குண்டு வீச்சால் சேதம்

நீர்வேலியில் உள்ள கண்ணாடித் தொழிற்சாலை மீது நேற்று நண்பகல் 12 மணியளவில் விமானக் குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டது.

இத் தொழிற்சாலையின் பிரதான பகுதி சேதமானதால், அங்கிருந்த பெறுமதி மிக்க பொருள்கள் நாசமாக்கப்பட்டன.

இரு மாதங்களுக்கு முன்னரும் இங்கு தாக்குதல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (33,39,50,38,)

## மன்னார் - ஆண்டான்குளத்தில் பெண், இரு குழந்தைகள் பலி

மன்னார்-ஆண்டான் குளத்தில்நேற்றுமுன் தினம் பிற்பகல் 2.30 மணியளவில் நான்கு பொம்மர்களும், ஹெலிகொப்டர் ஒன்றும் கடும் தாக்குதலை மேற்கொண்டன.

இச்சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு குழந்தைகளும் ஒரு பெண்ணும் பலியாகினர்.

மாந்தை பல நோ. கூ. சங்க ஆண்டான்குளம் கிளையும் முற்றாகச் சேதமானது. தாக்குதல் நேரம் அவ்ரோ விமானம் ஒன்று வட்டமிட்டது. (ப 35, 33)

## புத்தளம் ராணுவம் மன்னாரில் தேடுதல்

புத்தளம் மாவட்டம் இலவங்குளம் ராணுவத்தினர் மன்னார் பகுதியில் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவில் இன்னமும் ஆங்காங்கே மனித எலும்புகள்

தீவுப்பகுதியில் குறிப்பாக மண்டைதீவுப் பிரதேசத்தில் இறந்தவர்கள் பலரது எலும்புக் கூடுகள் இன்னமும் ஆங்காங்கே இடப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை யாழ் அரச அதிபர், மேலதிக அரச அதிபர் குழுவொன்று இப்பகுதிகளுக்குச் சென்று சேதமடைந்த இடங்களையும் மற்றும் பாதிப்புக்களையும் நேரடியாகப் பார்வையிட்டது.

இராணுவத்தினரால் கொல்லப்பட்டு கிணறுகளில் தூக்கி வீசப்பட்டவர்களின்

—04 ஆம் பக்கம் பார்க்க

## உணவுப் பொருள் கொண்டுவர தமிழ் ஊழியருக்கு அனுமதி

வவுனியாவில் உள்ள தமிழ் அரச ஊழியர்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை வட பகுதிக்கு எடுத்துச் செல்ல இராணுவம் அனுமதித்துள்ளது.

சவர்க்காரவகைகள் பத்து, பத்துக் கிலோ மா, பத்துக் கிலோ சீனி, பத்துக் கிலோ, அரிசி, ஆறு லீற்றர் மண்ணெண்ணெய் ஆகியவற்றை எடுத்து செல்லவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது, (38)

## விலை நிர்ணயக்கைக் கெடுபர்க்க கிளிநொச்சிக்கு மாறும் வியாபாரிகள்

யாழ்மாவட்ட அங்காடி வியாபாரிகள் பலர் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் வியாபாரத்தை ஆரம்பித்துள்ளார்கள். யாழ் மாவட்டத்தில் பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலைகள் கொண்டு வந்ததையடுத்தே இவர்களின் கவனம் அப்பகுதிக்கு திரும்பியுள்ளது. பூநகரிப்பகுதியில் மண்ணெண்ணெய் லீற்றர் நூறு ரூபாவாகவும், சீனி

— 04ஆம் பக்கம் பார்க்க

## ஆஸ்பத்திரி வீதி இல. வங்கியில் இன்று ஓய்வூதிய கொடுப்பனவு

இன்று காலை 9 மணி முதல் 12 மணி வரை இலங்கை வங்கி ஆஸ்பத்திரி கிளையில் ஐப்பசி மாதத்திற்குரிய சிவில், புகையிரத, உள்ளூராட்சி ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

வங்கி முகாமையாளருடன் ஏற்கனவே தொடர்பு கொண்ட சகல திணைக்கள கூட்டுத்தாபன உயர் அதிகாரிகளையும் இன்று காலை பத்து மணிக்கு வங்கிக்கு சமுகமளிக்குமாறு வங்கி முகாமையாளர் கேட்டுள்ளார்.

## வல்வெட்டித்துறை மாணவருக்கு வகுப்பேற்ற பரீட்சை ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை பகுதி மாணவர்களுக்கான வகுப்பேற்றப் பரீட்சை பின் போடப்பட்டுள்ளது.

அங்கு நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் பாடசாலைக் கட்டிடங்கள் சேதமடைந்தும் மாணவர்கள் இடம் பெயர்ந்தும் உள்ளதால் இது பின்போடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் விரைவில் பரீட்சைகளை நடாடத்துவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரிகளும், யாழ் கல்வித் திணைக்களமும் எடுத்து வருவதாகத் தெரியவருகிறது, (38

## யாழ்ற்ரன் கல்லூரியில் விஞ்ஞானப்பிரிவு ஆரம்பம்

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் க. பொ. த. உயர்தரவகுப்பு மாணவர்களுக்கான விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிப்பதற்கான அனுமதியை கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் வழங்கியுள்ளார்.

இக்கல்லூரி அதிபரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் இப்பிரிவை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு நீண்ட காலமாக வேண்டுகோள் விடுத்து வந்தனர்.

பண்டத்தரிப்பு கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. சண்முகராசா, அதிபரதும், அபிவிருத்திச் சங்கத்தினரதும் வேண்டுகோளைப்

—04 ஆம் பக்கம் பார்க்க

# பதிவேடுகளை அனுப்புவதிலும் கூட தமிழ்ப் பகுதிகள் புறக்கணிப்பு

யாழ் மாவட்டத்திலுள்ள பல அரச திணைக்களங்களுக்கு இவ்வாண்டிற்குரிய தினப்பதிவேடு, நினைவூட்டற் பதிவேடு என்பன கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படவில்லை.

இதனால் அன்றாட கடமைகளைச் செய்யும் போது பல கஷ்டங்களை ஊழியர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடமும் அரசு திட்டமிட்ட முறையில் இவற்றை இங்குள்ள பல அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கவில்லை.

ஆனால் தென்பகுதியில் உள்ள அலுவலகங்களுக்குத் தேவைக்கு அதிகமாக இப்பதிவேடுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ப-1)

# துருக்கியில் 300 யாழ் இளைஞர்கள் அகதிகளாக அலைகின்றனர்!

துருக்கியில் சுமார் 300 யாழ் தமிழ் இளைஞர்கள் போதிய வசதிகளின்றி அதிகளாக அலைவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குவைத், ஈராக் நாடுகளில் பணிபுரிந்து வந்த பல தமிழ் இளைஞர்கள் போர் நடவடிக்கைகள் தொடங்கியதையடுத்து அங்கிருந்து வெளியேறி கப்பலில் வேலைவாய்ப்புத் தேடும் முகமாகத் துருக்கிக்குச் சென்றிருந்தனர்

இவர்களில் ஒரு தொகுதியினர் கிறீஸ் துறை முகத்தின் வழியாகக் கப்பல்களில் வேலை வாய்ப்புப்பெற்றுச் சென்று விட்டனர்.

எஞ்சிய சுமார் 300 பேர் கையில் இருந்த பணம் தீர்ந்து விட்ட நிலையில் வேலைவாய்ப்பும் பெற முடியாமலும், தாய்நாடு திரும்ப வழியில்லாமல் துருக்கியில் பெரும் அல்லற்படுவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (74)


## மில்க்வைற் திரவ சவர்க்காரம் சகல தேவை அழுக்கு நீக்கி

MILKWHITE LIQUID SOAP
All- Purpose Dirt Remover

சாதாரண வீட்டுச் சலவைக்குப்
**பாவிக்கும் முறை**

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்
3. கலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் கலவையைத் துணியில் செறியச் செய்யவும்.
4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்.
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கும் பொலிவுக்கும் ஏற்ப அளவில் மாற்றஞ் செய்யவும்.

-மில்க்வைற்

01190



## ஆ. இராசையா அன் சன்ஸ்

மருந்துக்கடை

N/52பலாலி றோட், திருநெல்வேலிச்சந்தி.

எங்களிடம் கோயில் அபிஷேகச் சாமான்கள், புதுமனை அத்திவாரச் சாமான்கள், சங்காபிஷேக, கும்பாபிஷேக சாமான்கள், ஆயுள் வேத மருந்துச் சரக்கு [illegible]. மாணைச்சடங்கு கிரியைச் சாமான்கள் மற்றும் [illegible] பெற்றுக் கொள்ளலாம். 01197


# கூட்டுறவுப்பயிற்சி மீண்டும் ஆரம்பம் வெளிக்களப்பயிற்சியும் இடம்பெறும்

யாழ் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

நாற்பத்திரண்டு மாணவர்களைக் கொண்ட கூட்டுறவுத் தராதரப் பத்திர சாதாரண தர பயிற்சி நெறியில் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த பணியாளர்களும், தனியார் மாணவர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நான்கு மாதங்களுக்கு நடைபெறும் இப்பயிற்சியின் போது வெளிக்களப் போதனையாகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடியாக மாணவர்கள் சென்று அங்குள்ள நடைமுறைகள் பற்றியும் அறிந்து கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது (ப-10,66)

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவம்

கடந்த வருடம் புரட்டாதி மாதம் நடைபெறவேண்டியிருந்து பின்போடப்பட்ட ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தர மகோற்சவம் அடுத்தமாதம் 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

21ஆம் திகதி வெண்ணெய்த் திருவிழாவும், 22ஆம் திகதி துகில் உரிதல் திருவிழாவும், 23ஆம் திகதி பாம்புத் திருவிழாவும், 24ஆம் திகதி கம்சன் திருவிழாவும், 25 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 26 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 27 ஆம் திகதி தேர்த் திருவிழாவும். 28 ஆம் திகதியான மாசிமகத் தினத்தன்று கடல் தீர்த்தத் திருவிழாவும், மார்ச் மாதம் [illegible] திகதி கேணித் தீர்த்தத் திருவிழாவும், கொடியிறக்கும் வைபவமும், 2ஆம் திகதி ஆஞ்சநேயர் மடையும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (15)

## காணிக்கை மாதா வருடாந்தர உற்சவம்

மிருசுவில்- தவசிக்குளம் புனித காணிக்கை மாதா ஆலய வருடாந்தர உற்சவம் 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தற்போது தினமும் மாலையில் நவநாள் ஆராதனைகள் இடம் பெற்று வருகின்றன.

2 ஆம் திகதி மாலை வேஸ்பர் ஆராதனைகளும் 3 ஆம் திகதி காலை திருநாள் கூட்டுத் திருப்பலியும் இடம் பெறும்.

உற்சவ ஏற்பாடுகளை மிருசுவில் பங்குத் தந்தை அருட்திரு. லோரன்ஸ் சேவியர் (அ.ம.தி) அடிகளார் செய்துள்ளார்.

## வாழ்க்கைத் திறன் பயிற்சி வகுப்பு

1991 ஆம் ஆண்டு வாழ்க்கைத்திறன் கல்வியை யாழ் மாவட்டத்தில் ஆரம்பிக்கவுள்ள பாடசாலை அதிபர்களுக்கான பயிற்சி வகுப்பு 28, 29 ஆம் திகதிகளிற் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு மண்டபத்தில் கல்விப் பணிப்பாளர் ஆர் சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறுகின்றன. (74)

## பூநகரி வீதி திருத்தப்படும்

பரந்தன் - பூநகரி வீதி திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மிகவும் மோசமான நிலையில் உள்ள இவ் வீதியை நேரிற் சென்று பார்வையிட்ட கிளிநொச்சி அரசாங்க அதிபர் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் உதவியுடன் இந்த வீதித் திருத்த வேலைகள் நடைபெறவுள்ளன.

இவ் வீதி வழியாகவே யாழ் குடாநாட்டிற்கான போக்குவரத்து நடைபெறுவதால் துரிதகெதியில் திருத்த வேலைகள் முடிவடையும் என்று கிளிநொச்சி அரசாங்க அதிபர் கே மாணிக்கவாசகர் தெரிவித்தார். (35)

## முத்திரைப் புள்ளிக்கு உணவுவழங்கஏற்பாடு

வலி- வடக்குப் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ள பல பொதுமக்களின் உணவு முத்திரைகளுக்கான 3ஆம் 4ஆம் புள்ளிகள் வெட்டப்படாது இருப்பதும், அவற்றிற்கான உணவுப் பொருட்கள் ப. நோ. கூ. சங்கங்களால் வழங்கப்படாமல் உள்ளதும் பொதுமக்களால் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளன.

இதனையடுத்து இவை தொடர்பான விபரங்கள் தற்போது வலி- வடக்கு உதவி அரசாங்க அதிபரினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

எனவே 3ஆம், 4ஆம் உணவு முத்திரைப் புள்ளிகளை வைத்திருப்போர் உடனடியாகத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வலி- வடக்கு உதவி அரச அதிபர் கேட்டுள்ளார். (ப-10)


## விலங்கியல்

R. ஈஸ்வரதாசன்
(B Sc. Cey)

பிரத்தியேக வகுப்பு
ஆரம்பம்: 29.01 91
செவ்வாய்

92 A/L இழையவியல்
91 A/L பாகுபாடு
90 A/L விசேட வினாவிடை

விபரங்கள் நேரில்.
இல 33, குமாரசாமி றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
01196



## சிறு விளம்பரம்

**சேவை**

நல்லூரில் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கும், கறுப்பு, வெள்ளைப் புகைப்படங்களுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம் ''சித்திராலயா'', இல. 351, கோவில் வீதி, நல்லூர். (நல்லூர் கோவில் பின்வீதியில், கம்பன்கோட்டம் முன்மாக). 01176

**கல்வி**

தைப்பூசத் தினத்தில் 30. 1. 91 புதன் மிருதங்க வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கற்க விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும். பின்பு வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் காலையும், மாலையும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் நடாத்தப்படும். விபரங்களுக்கு: கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1 நாவலர் வீதி, (மிருதங்க தொழில் வகுப்புநிலையம்), யாழ்ப்பாணம். 01193

**விற்பனைக்கு**

மில்க்வைற் திரவ சவர்க்காரம் (Liquid Soap) வீட்டுச் சலவைக்குச் சிறந்தது. பாவனையாளர் வசதி கருதி கட்டைவேலி ப.நோ கூ. சங்கத்திலும் விற்பனையாகிறது. போத்தல் ரூ. 90/-மட்டுமே 01191


## 120ஆம் நாள் நினைவாக



தோற்றம் 26 - 02 - 1952

மறைவு 01 - 10 - 1990

வானுறையும் தெய்வம்

**திருமதி கெங்காதேவி நடேசன்**

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

இலங்கை வங்கி சுன்னாகம்.
முகாமையாளரும், ஊழியர்களும்.
01170

உ
ஸ்ரீராம ஜெயம்

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



பிரம்மஸ்ரீ
சி. வ. இராதாக் கிருஷ்ணக்குருக்கள்

ஆரம்பம்: 18-06-1952
முடிவு: 15-01-1987
திதி: 29-01-1991

காலச் சூறாவளியில்— நீ
கரைந்து போனாய்
துயரச் சகதியில்—நாம்
ஆழ்ந்து போனோம்.
ஆனால்நினைவலைகள்...
—உன்னவர்கள்

குடியிருப்பு
சுழிபுரம் 01179

# மாகாணசபையால் மலையக மக்களுக்கும் பயனில்லை

## 'உழைக்க மட்டுமே நாம்! அனுபவிப்பது அவர்கள்!!'

'மலையகப்பகுதி இந்தியத் தமிழ் மக்கள் மத்திய அரசினால் மட்டுமல்ல மாகாணசபைகளிலும் புறக்கணிக்கப்பட்டே வருகிறார்கள்.'

இவ்வாறு மத்திய மாகாணசபை உறுப்பினர் வி.பி. கந்தையா தெரிவித்தார்.

'எந்தச் சந்தர்ப்பத்திலும் சபையில் எடுத்தாலும் அது மலையக மக்கள் சம்பந்தப் பட்ட விடயங்களை மாகாண புறக்கணிக்கப் பட்டேதான் வருகிறது.'

'தோட்டப் பகுதிகளில் எந்த விதமான அபிவிருத்தித் திட்டங்களும் செயற்படுத்தப் படவில்லை. தோட்டத் தொழிலாளர் குடியிருப்புக் களுக்கு மின்சாரம், காணிப் பகிர்வு, குடியிருப்பு, சுகாதார சேவை, வேலைவாய்ப்பும் கிடைப்பதில்லை.'

'உழைக்க மட்டும் பிறந்தோம், அனுபவிக்க அல்ல என்பது போல் 40 ஆண்டுகளுக்குப் பிறகு கிடைத்த வோட்டுக்களையும் வோட்டுப் போடுவதற்கு மாத்திரம் தானே தவிர அனுபவிக்க அல்ல என்பதைத் தான் மாகாண சபைகளின் நடவடிக்கைகள் காட்டுகின்றன' எனவும் அவர் தெரிவித்தார். (38)

## தமிழர்கள் சிங்களத்தில் விளாசல்!
### சிங்களவர்கள் 'கொஞ்சங்.. கொஞ்சங்..'

மத்திய மாகாண சபையில் தமிழ் அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்கள் தனிச் சிங்களத்திலேயே உரையாற்றுகிறார்கள்— இவர்கள் மறந்தும் தமிழ் பேசுவதில்லை.

மலையகப் பகுதிகளில் நடைபெற்ற சில கூட்டங்களில் தமிழ் உறுப்பினர்கள் சிங்களத்தில் உரையாற்றுவதைத் தமிழ் மொழியிலே மொழிபெயர்க்கும் அவலமும் ஏற்படுகிறது.

தமிழ் உறுப்பினர் சிங்களத்தில் வெளுத்துக் கட்டும் அதேவேளை சில சிங்கள உறுப்பினர்கள அங்கு உரையாற்றும் போது 'கொஞ்சங்...... கொஞ்சங்' தமிழ் பேசுகிறார்கள். (38)

## பரிசீலனை துரித கதியில்

யாழ் கல்வித்திணைக்களத்தில் தேங்கியுள்ள கடன் விண்ணப்பப் பத்திரங்களை விரைவில் பரிசீலித்துத் தகுதியான விண்ணப்பதாரிகளுக்குக் கடன்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள எடுக்கப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்களில் மூன்று ரூபா முத்திரைகளுக்குப் பதிலாக இரண்டு ரூபா முத்திரைகளே ஒட்டப்பட்டுள்ளன எனவும் இதனாலேயே இத்தடங்கல்கள் ஏற்பட்டதாகவும் யாழ் கல்வித் திணைக்களக் கணக்காளர் சுகுணதிரன் தெரிவித்தார்.

## சிறுபோக நெற் செய்கைக்கு
### கிளிநொச்சியில் உரத்தைச் சேமிக்க முயற்சி

வலைப்பாடு ஊடாகக் கொழும்பிலிருந்து எம். வி. வில்லு கப்பல்மூலம் கொண்டு வரப்படும் 500 மெற்றிக் தொன் உரத்தை இவ் வருட சிறுபோக நெற்செய்கைக்குச் சேமித்துவைக்கக் கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஏற்பாடு செய்துள்ளார்.

இம்மாவட்டத்தில் நெற் செய்கை அறுவடையை நெருங்கி வருவதால் திட்டமிட்டபடி உரத்தை விவசாயிகளுக்கு வழங்கி மீத முள்ள உரத்தை சிறுபோகத்திற்கு சேமிக்கவும் முடிவு செய்யப் பட்டுள்ளது.

மேற்படி கப்பலில் 500, மெற்றிக்தொன் உரம், 100 மெற்றிக் தொன் அரிசி, மாவு-150 மெற்றித்தொன், சீனி 15 மெற்றிக் தொன், பால்மா, 9 மெற்றிக் தொன், பருப்பு, 2 மெற்றிக் தொன், தேயிலை-3 மெற்றிக் தொன், பயறு -2 மெற்றிக் தொன், மல்லி -2 மெற்றிக் தொன், மண்ணெண்ணெய் 50 பெரல் என்பன கொண்டுவரப்படுகின்றன என்று கிளிநொச்சி அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (ப-35, 35)

## அடிக்கடி தொடரும் தாக்குதல்
### தென்மராட்சியில் வீடுகள் கடைகள் சேதம்

கடந்த சில தினங்களாக தென்மராட்சிப் பகுதியில் ஹெலிக்கொப்டரிலிருந்து பரவலாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பலாலியிலிருந்து அடிக்கடி ஆனையிறவுக்குச் சென்று வரும் ஹெலிக்கொப்டர்களே இவ்வாறு தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

கடந்த சனிக்கிழமை மாலை மிருசுவிலில் ஒலை ஏற்றிவந்த உழவு இயந்திரத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இளம் பெண் ஒருவர் உட்பட இரு பாதசாரிகள் காயமடைந்தனர், வீடு ஒன்றும் சேதமடைந்தது.

ஞாயிற்றுக்கிழமை மாலை கொடிகாமம் சந்தியில் லொறி ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இரு பொதுமக்கள் காயமடைந்தன. பல கடைகளும் சேதமுற்றன.

நேற்றுக்காலை சாவகச்சேரி அரசடிப்பகுதியில் ஆட்டோ ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அதில் பயணம் செய்த இரு கத்தோலிக்க அருட்சகோதரிகள் மயிரிழையில் உயிர் தப்பினர்.

பளை, எழுதுமட்டுவாள், முகமாலை, சாவகச்சேரிப் பகுதியிலும் தாக்குதல்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

## நல்லூர் ஓய்வூதியர் சங்கக்கூட்டம்

நல்லூர் தொகுதி ஓய்வூதியர் நலன்புரிச்சங்க 9 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

ஓய்வூதிய விண்ணப்பங்கள் சமர்ப்பித்தவர்களும் இக்கூட்டத்தில் பங்கு பெறலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை அணி மண் கவ்வியது

நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையில், நியூசிலாந்தில் நேற்று முன்தினம நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில், நியூசிலாந்து அணி வெகு இலகுவாக இலங்கை அணியை 5 விக்கற்றுக்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுததாடக் களத்தில் இறங்கிய இலங்கை அணி, துரித கெதியில தனது விக்கற்றுக்கள் யாவையும் இழந்து 177 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி வெற்றி இலக்கான 178 ஓட்டங்களை 5 விக்கற்றுக்களைப் பறிகொடுத்துப் பெற்று வெற்றி வாகை சூடியது. (16)

## 111 பட்டதாரிப் பயிலுநர்கள் கிளி. மாவட்டத்துக்கு நியமனம்

(தொடர்ச்சி)

செல்வி ஏ நளாயினியாழ்ப்பாணம், செல்வி ஆர். நாகராசா யாழ்ப்பாணம், செல்வி எம். நாகேஸ்வரி நீர்வேலி, செல்வி. ஏ. நேசராணி சுழிபுரம், எஸ் ஏ நற்குணேஸ்வரன் பண்டத்தரிப்பு, எம் புஸ்பவண்ணன் வட்டுக்கோட்டை, (வளரும்)

## கும்பிடுங்கள் தாராளமாக... கூந்தலிலும் சற்றுக் கவனமாக!

இந்துக்கள் நேர்த்திக்காக கோவிலில் முடியிறக்குவது காலம் காலமாக உள்ள பழக்கம் இதில் இந்துக்கள் தவறுவதே இல்லை.

ஆனால் சில திருடர்கள் ஆண்டவனுக்கு மட்டுமல்ல அவர்களுக்கும் இதில் பங்கு கேட்கிறார்கள்.

இது இங்கல்ல, பண்பாட்டுக்குப் பேர்போன தமிழகத்தில் தினமும் நடக்கிறது.

அங்குள்ள மகாதேவர் கோவிலுக்குப் போன ஒரு பெண் இதை அனுபவபூர்வமாக உணர்ந்தார்.

குளித்து கூந்தலைத் தளர துணிமுடிச்சு இட்டிருந்த இப்பெண்மணி சன்னிதியில் நின்று மெய்மறந்து இறைவனைத் தியானித்துக் கொண்டிருந்தார்.

வணங்கித் தலைநிமிர்ந்தால் அப்படியே லேசாகிப் போனதைப்போல உணர்வு; மனதுமட்டுமல்ல உடலும் குறிப்பாகத் தலை. அவரின் அழகிய நீண்ட கூந்தலை அங்கு காணவில்லை.

இப்படி பக்தர்களின் தலையை 'லேசாக்கி' முடியை 'விக்' தயாரிப்பாளர்களிடம் விற்றுக் காசாக்கி வருகிறார்கள் தமிழகத் திருடர்கள். (16)

# உயிர்கொல்லும் மருந்துத்தட்டுப்பாடு

— அழகு சந்தோஷ்

இப்பொழுது தமிழ்ப் பகுதிகளில் பல அத்தியாவசியப் பொருட்களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது.

இவை... ..... அரசாங்கம் விதிக்கும் கட்டுப்பாடுகளால் விளைந்த தட்டுப்பாடுகள்.

சீனி, மா, எரிபொருள், பால்மா, நெருப்புப் பெட்டி...... இந்த வரிசையில் அத்தியாவசிய மருந்துகள் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. ஏனைய பொருட்கள் இடையிடையே ஊடுருவி வந்தாலும், மருந்துப் பொருட்கள் ஜூன் 11 ஆம் திகதிக்குப் பின், ஏறத்தாழ முற்று முழுதாகவே தடைப்பட்டு விட்டன.

அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்குப் பிச்சையிட்டதுபோலச் சிறிதளவு சொற்ப மருந்துகள் இடையிடையே அனுப்பப்பட்ட போதும், தனியார் துறை வைத்திய சாலைகளுக்கும், மருந்துக் கடைகளுக்கும் இதுவரை எந்த வித மருந்துகளும் அனுப்பப்படவில்லை.

உயிர்காக்கும் பல மருந்துகளை குடா நாட்டில் எங்குமே காண முடியாதிருக்கிறது.

மிகவும் சாதாரணமானதும், மிக அதிக அளவில் உபயோகப்படுத்தப்படுபவையுமான பனடோல், டிஸ்பிரின், பரசிட்டமோல், அஸ்பிரின் போன்ற மருந்துகளுக்குக் கூடத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இது குளிர்காலம் ...ஆஸ்த்மா நோய் கடுமையாகும் நேரம். கைகளை ஊன்றிக் கொண்டு, கழுத்துத் தசை நார்கள் புடைக்க, நாசித்துவாரங்கள் விரிந்து, விரிந்து மூட சுவாசிக்கப் பிரயாசைப்பட்டுக்கொண்டு அவஸ்தைப்படும் ஆஸ்த்மா நோயாளரைக் காண எவருக்குமே அனுதாபம் பிறக்கும்.

ஆனால் அரசாங்கத்தின் மனம் இளகுவதாக இல்லை.

அவர்களது கடுமையான ஆஸ்த்மா இழுப்பைத் தணிக்கும் ஊசி மருந்துகளான அமைனோபிலின் (Aminophylline), அட்ரீனலின் (Adrenalin), சல்பியூடமோல் (Salbutamol) போன்றவை அரசாங்க ஆஸ்பத்திரிகள், தனியார் வைத்திய சாலைகள், மருந்துக் கடைகள் எங்குமே இல்லை.

இதேபோல் ஆஸ்த்மா நோயாளர்கள் பரவலாகப் பாவிக்கும் எபரீன் கொம்பவுண்ட் (Ephedrin Compound) பிரனோல் (Franol), டெட்ரால் (Tedral), வென்டலோலின் (Ventolin), எபட்ரீன் (Ephedrine), கடோபிலின் (Cardophylline) போன்ற மருந்துகளுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. ஒருவேளை கிடைத்தாலும் யானை விலை, குதிரை விலை விற்கிறது.

இப்பொழுது நெருப்புக் காய்ச்சல் (Typhoid) வேகமாகப் பரவி வருவது யாவரும் அறிந்த ஒன்று. இதைக் குணமாக்கத் தேவைப்படும் குளோரம் பெனிகோல் என்ற மருந்து (Chloremphenicol) எங்கும் கிடைக்காத பொருளாகி விட்டது. இதன் காரணமாக இந்நோய் வேகமாகப் பரவிப் பாரதூரமான பிரச்சினையாக உருவெடுக்கலாம்.

கிருமித் தொற்றலால் உண்டாகும் வயிற்றோட்டம், சளி, மூளைக் காய்ச்சல், சீழ்பிடித்த புண் போன்ற பல்வேறு நோய்களைக் குணமாக்க அவசியமான நுண்ணுயிர் கொல்லி மருந்துகளுக்கும் (Antibiotics) மோசமான தட்டுப்பாடு நிலவுகிறது. உதாரணமாக அம[illegible] சோல் (Co-Trimaxazole), அமொக்சிசிலின் (Amoxycillin) பென்சிலின் (Penicillin) எரித்ரோமைசின் (Erythromycin) போன்ற எல்லா மருந்துகளுக்குமே தட்டுப்பாடு நிலவுகிறது.

உயர் இரத்த அழக்கம் (Hypertension), இருதய நோய்கள் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான புரபனைனோல் (Propranalol), சோபிற்றேட் (Sorbitorate). மினிபிரஸ் Minipress) அல்டக்டோன் (Aldactone), சிலோகே (Slow K) அல்டோமெட் (Aldomet) போன்ற மருந்துகளின் நிலையும் அதேதான்.

கர்ப்பிணிகளுக்குத் தேவைப்படும் இரும்புச்சத்து மாத்திரைகள், குழந்தைகளுக்குத் தேவைப்படும் பல்வேறு மருந்துகளும் கூட எங்குமே கிடைப்பதாயில்லை.

மொத்தமாகச் சொல்லப் போனால் எல்லா மருந்துகளுமே கிடைப்பதாயில்லை.

குண்டு வீச்சினாலும் துப்பாக்கி ரவைகளாலும் கொல்ல முடியாதவர்களை, நோய்களினால் மலிவாகச் செலவு ஏதுமின்றிக் கொன்றுவிடலாம் எனத் திட்டமிட்டுள்ளது போல் தெரிகிறது.

அவர்களின் முக்கிய தேவை தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதுதான்

ஆனால்... மருந்துக் கட்டுப்பாடினால் ஒரு நல்லவிளைவும் கூட ஏற்படலாம் போல தெரிகிறது!!

ஏனைய மருந்துகளைப் போலவே குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரைகளுக்கும், ஊசிகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதன் காரணமாகக் கட்டுப்பாடுகள் இன்றி, நிறையக் குழந்தைகள் பிறந்து, போரினால் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யக் கூடும்!

மருந்துகளுக்குக் கடும் தட்டுப்பாடுகள் உள்ள நிலையில் எம்மவர்கள் செய்யக்கூடியது என்ன?

★ மிக அத்தியாவசிய தேவைக்கல்லாது மருந்துகள் சாப்பிடுவதைத் தவிர்க்கவேண்டும். இன்றைய இக்கட்டான நிலையில்கூட தலைமயிர் உதிருவதைத் தடுக்கவும், முகம் பருக்கள் இன்றி வழுவழுப்பாக இருக்கவும் வைத்தியம் செய்வதற்காக ஆஸ்பத்திரிகளுக்குச் செல்லும் சமூக உணர்வு அற்ற மனிதர்கள் இருக்கவே செய்கிறார்கள்

★ சிலர் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது என எண்ணி, த் தேவைக்கு அதிகமாக வாங்கி வீடுகளில் சேமித்து வைக்கிறார்கள். இதனால் சில மருந்துகளுக்குத் தேவையற்ற தட்டுப்பாடு ஏற்பட்டு விடுகிறது. இது தவிர்க்கப்பட வேண்டும்

★ தேவைக்கு அதிகமாக வீடுகளில் இருக்கும் மருந்துகளை அருகில் உள்ள வைத்தியசாலைகளுக்குக் கொடுத்தால் (இனாமாக அல்ல) அது வேறு பல உயிர்களைக் காக்க உதவக் கூடும்.

★ மருந்துகளின் விலை நிர்ணயம் இப்பொழுது மருந்துக் கடைக்காரர்களின் கைகளிலிருந்து நழுவி லொறிச் சொந்தக்காரர்களின் கைகளுக்குச் சென்று விட்டது போலத் தெரிகிறது- உதாரணமாக கொழும்பில் ரூபா 1000/- ஆக வாங்கப்படும் அம்பிசிலின் சுமார் 3000/- இங்கு

—04 ஆம் பக்கம் பார்க்க

# வளைகுடாக் கடலில் கலக்கும் எண்ணெய் அகற்ற

# நோர்வேயின் "உறிஞ்சும் கப்பல்" விரைகிறது!

வளைகுடாவில் வெடித்த போரினால் பாரசீகக் கடலில் அளவுக்கதிகமாக கலந்துவரும் எண்ணெய்ப்படலத்தை அகற்றும் முயற்சியில் தற்போது முழு உலகின் கவனமும் திசை திரும்பியுள்ளது. இப்படலத்தை அகற்றுவதற்காக பல நாடுகள் துரிதமுயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

கடலில் இருந்து எண்ணெயை மட்டும் உறிஞ்சி இழுக்கக்கூடிய பாரிய கப்பல் (Sucking Ship) ஒன்றை நோர்வே வளைகுடாவிற்கு அனுப்பியுள்ளது. பிரிட்டன் எண்ணெய்ப் படலத்தை ஐதாக்கும், உறிஞ்சக்கூடிய நவீன ஐம்பது தொன் நிறையுடைய உபகரணங்களை அனுப்பியுள்ளது. ஜப்பானும் உதவ முன்வந்துள்ளது, இதே சமயம் எண்ணெய்க் கசிவு ஆரம்பிக்கும் எண்ணெய்க்குதங்கள் மீது அமெரிக்கா நடாத்திய லேசர் குண்டு வீச்சினால் எண்ணெய் கசிவு குறைந்துள்ளதாகவும் கடலில் எண்ணெய் மீது படர்ந்து எரிந்த தீ குறைக்கப்பட்டுள்ளதாகவும் ரியாட்டில் அமெரிக்க தளபதி ஒருவர் கூறினார். கடலில் சுமார் ஒரு கோடி பீப்பாய் எண்ணெய் கலந்திருக்கலாம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

### ஈராக் மீது தொடர்ந்து குண்டுவீச்சு

நேற்றும் ஈராக் மீது அமெரிக்க மற்றும் பிரேஞ் விமானங்கள் கடும் தாக்குதலை நடாத்தின. பஸ்ராவில் பதினைந்து நிமிடத்திற்கு ஒரு தடவை குண்டு வெடித்த ஒலி கேட்டதாம். நேற்று மட்டும் 208 தடவை ஈராக் மீது குண்டு வீச்சு நடந்துள்ளது. ஈராக்கின் வடபகுதியான குர்திஷ் பகுதியிலும் தாக்குதல் நடந்தது. தாக்குதல் நடத்திய நான்கு விமானங்களை தனது மிக்-23 விமானங்கள் சுட்டு வீழ்த்தியதாகவும் ஓர் அமெரிக்க விமானத்தை கலைத்துச்சென்று துருக்கிமீது சுட்டுவிழுத்தியதாகவும் ஈராக் கூறியுள்ளது.

### பெப்ரவரி மட்டும் குண்டு வீச்சு நடக்குமாம்

தரைத்தாக்குதலை ஆரம்பிக்கும் நிலை இன்னமும் ஏற்படவில்லை. குண்டு வீச்சு பெப்ரவரி மாதம் இறுதிவரை நடக்கும் என அமெரிக்க பாதுகாப்பமைச்சர் டிச்செனி பேட்டி ஒன்றில் கூறினார். பெப்ரவரி மாதத்தின் பின்னரே தரைத்தாக்குதல் பற்றி ஆலோசிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

### ஈரானில் உள்ள ஈராக் விமானங்கள் அதிகரிப்பு

ஈராக்கின் சுமார் ஐம்பது விமானங்கள் ஈரானில் தரையிறங்கியுள்ளதாக அமெரிக்கா, பிரிட்டன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவ் விமானங்களில் அநேகமானவை போர் விமானங்கள். சில சரக்கு விமானங்கள் என்றும் மூன் எச்சரிக்கை விமானம் ஒன்றும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து ஈரான் மறுத்து வருகிறது.

### அமெரிக்க இலக்குகள் மீது குண்டு வெடிப்பு

கிரேக்க தலைநகர் ஆதன்ஸில் அமெரிக்க எக்ஸ்பிரஸ் வங்கி ஒன்றும், ஏஜென்சி நிலையம் ஒன்றும் குண்டு வெடிப்பினால் தகர்க்கப்பட்டுள்ளன. துருக்கியில் அமெரிக்க கட்டிடம் ஒன்றின் மீது ரொக்கட் தாக்குதல் நடந்தது. பிலிப்பைன்ஸில் அமெரிக்க வானொலி நிலையம் ஒன்றினருகே குண்டு வெடித்தது. இதேவேளை தென்கொரிய விமானநிலையத்தில் பாதுகாப்பு உஷார்படுத்தப்பட்டுள்ளது.

## மண்ணெண்ணெய் தண்ணீராக மாறியது!

கேரதீவு துறையில் பெண்மணி ஒருத்தியின் 5 லீற்றர் மண்ணெண்ணெய் வீடு வந்து பார்த்தபோது தண்ணீராக மாறியிருந்தது.

இப் பெண் வவுனியாவில் இருந்து மண்ணெண்ணெய்க் கொள்கலனுடன் வள்ளத்தில் வரும்போது சன நெரிசலில் அவரது கொள்கலன் மாற்றப்பட்டுவிட்டது. (33)

## தையிட்டியில் வீடுகளிலிருக்குமாறு இராணுவம் பணிப்பு

காங்கேசன்துறை தையிட்டிப் பகுதியில் இராணுவத்தின் பிடியில் சிக்கியுள்ள மக்கள் தத்தமது வீட்டிலேயே தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

இவர்கள் சில காலம் ஊறணித் தேவாலயத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

கல்லூரி வீதியிலுள்ள மூன்று வீடுகள் முற்றாகத் தகர்க்கப்பட்டுள்ளதாகவும் நடேஸ்வராக் கல்லூரியின் மாடிக்கட்டிடம் உட்பட சில கட்டிடங்கள் பெரும்சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கொழும்புக்கு ஒருவர் அனுப்பிய கடிதத்தில் இருந்து தெரியவந்துள்ளது.

இத்துடன் பலாலியில் இராணுவ முகாமுக்கு வடபுறத்தில் உள்ள வீடுகள் தகர்க்கப்பட்டு வெளியாகத் தெரிவதாகவும் அதன் இடிபாடுகள் கடலுள் தள்ளப்பட்டு இறங்குதுறை அமைக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு பின் விடுவிக்கப்பட்ட வயோதிபப் பெண் ஒருவர் தெரிவித்தார். (33)

## யாழ் நகர் புனரமைப்பு செயலகத்தில் மாநாடு

பட்டணவாக்கத் திட்டத்தின் கீழ் நகரங்கள் புனர்நிர்மாணிக்கப்படும் போது வாகனங்கள் நிறுத்துமிடத்தை நிலத்துக் கடியில் அமைப்பது பாதுகாப்பானது என்று, யாழ் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

யாழ் மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரசபையின் விதிமுறைகளுக்கமைய வாகனம் தரிக்கும் இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்று இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பட்டண வாக்கம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு மாநகர ஆணையாளர், உள்ளூராட்சி, உதவி ஆணையாளர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவந்து நிவர்த்தி செய்யலாம் என்று யாழ் மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

நகர புனர்நிர்மாணம் சம்பந்தமான குழுவொன்று பேராசிரியர்துரைராசா தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது என்றும் இக்குழுவிடம் பட்டண வாக்கம் சம்பந்தமான சகல ஆலோசனைகளையும் சமர்ப்பிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (36)

## துணைவேந்தர் கொழும்பு பயணம்

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா நேற்று கப்பல் மூலம் கொழும்பு பயணமானார். (50)

### மண்டைதீவில்...

எலும்புக் கூடுகள் இன்றும் மீட் [illegible] படுதும் இவர்களால் அ[illegible]ானிக்கப்பட்டுள்ளது.

இவற்றை மீட்டெடுத்து காணாமற் போனவர்கள் இறந்துள்ளமைக்கான தடயங்கள் கிடைக்கும் பட்சத்தில் அவ்வாறான குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்குவது பற்றியும் செயலக வட்டாரங்களில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (66)

## நெற்கதிர் திருட்டு புலிகள் எச்சரிக்கை

வடமராட்சிப் பகுதியில் உள்ள வயல்களில் நெற்கதிர்களை திருடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அறுவடை தொடங்கியுள்ளதால் சிலர் இவற்றைத் திருட முயல்வதாக வந்த புகார்களையடுத்து இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

### உயிர்க்கொல்லும்...

சொடுக்கப்படுகிறது. இவ் விஷயத்தில் வியாபார லாபம் மாத்திரமின்றி மனித உயிர்களும் ஊசலாடிக் கொண்டிருப்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் நினைவில் நிறுத்த வேண்டும்.

★ லாப நோக்கத்துடன் காலங்கடந்து விட்ட மருந்துகளையும், செயலிழந்த மருந்துகளையும் விற்பதைத் தவிர்க்க வேண்டும்.

★ சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னால் நோயாளிகள் மருந்தில்லா நோன்பு (உண்ணாவிரதம் போல) இருப்பதும் பயன் தரக்கூடும்,

### விலை...

கிலோ ஐம்பது ரூபாவாகவும் மற்றும் பொருள்களும் கட்டுப்பாடு இல்லாமல் பல விலைகளிலும் விற்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

இதே போல கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் இடத்துக்கிடம் வெவ்வேறு விலைகளில் பொருள்கள் விற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (66

### நல்லூர்...

தக்கது. கு. ஜெயந்தினி (22) படுகாயமடைந்தார்.

இருபாலைச் சந்தியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் அப்பையா நாகரத்தினம் என்ற விதவை (73) ஒரு கையை இழந்தார்.

செ. திருநாவுக்கரசு (43) படுகாயமடைந்தார். வீடு ஒன்றும் சேதமடைந்தது.

நேற்று நல்லூர்ப் பகுதியில் நடந்த தாக்குதலில் சேதமடைந்த வீடொன்றினுள் ஏணையில் இருந்த மூன்று மாதக் குழந்தை தெ. கிரிதரன் காயமின்றி உயிர் தப்பியமை இங்கு குறிப்பிடத் தக்கது.

(33,ப11,39,50,38,74,ப14)

### யாழ்ற்ரன்...

பரிசீலனை செய்து சிபாரிசு செய்தமையை அடுத்தே கல்விப்பணிப்பாளர் இவ்வாண்டு முதன் முதலாக விஞ்ஞானப் பிரிவை ஆரம்பிக்க அனுமதி வழங்கியுள்ளார். (12)

### புத்தளம்...

போது ஐந்து வீடுகளைக் குண்டு வைத்து தகர்த்தனர். விடுதலைப்புலிகளின் நினைவுத்தூபி ஒன்றையும் அவர்கள் சேதமாக்கிவிட்டு தமது முகாமிற்கு மீண்டுள்ளனர் (71)

## தெல்லிப்பழையில் தமிழீழ மீட்புநிதி

தமிழீழ மீட்பு நிதிக்கு பங்களிக்க விரும்பும் தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த அனைவரும் பங்களிப்பதற்கு வசதியாக 3-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிதி சேகரிக்கப்படவுள்ளது.

பங்களிக்க விரும்புவோர் சிற்றூரவையினால் அவர்களுக்கென அறிவிக்கப்பட்ட இடங்களில் தமது பங்களிப்பைச் செலுத்தலாம் எனவும் இப் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வாழ்வோர் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தொடர்பு கொள்ளுமாறும் நிதிப்பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (71)

## அமைதியான தமிழக வீதி மறியல்

இந்திரா காங்கிரஸ் கட்சியினரும் அ. தி. மு. க.வினரும் தமிழக அரசைக் கலைக்குமாறு கோரி நேற்றுத் தமிழகத்தில் நடந்த வீதிமறியல் போராட்டம் அமைதியாக முடிவடைந்தது. பன்னிரண்டு மணிநேரத்தில் வாகன நடமாட்டமோ வன்முறையோ இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## லங்கா சிறி கப்பல் நேற்று வந்தது

லங்காசிறிக் கப்பல நேற்று மாலை 3-30 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இக் கப்பலில் இலங்கை வங்கிக்குரிய பணம், தபால்கள் மற்றும் உணவுப் பொருள்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

அதே வேளை இங்கு தரித்து நின்ற குமண கப்பல் நேற்று நோயாளிகள், தபால் பொதிகளுடன் கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்றது. (38, 50)

## மரக்கறி விலை வீழ்ச்சி

தற்போது யாழ்ப்பாணப் பகுதியில் மரக்கறிகளின் விலைகள் முன்பு இருந்ததை விட வீழ்ச்சியடைந்துள்ளன (48)

## இரத்ததானம் வழங்கும் பெண் தாதிகள்

யாழ் போதனாவைத்திய சாலை இரத்த வங்கியில் பணிபுரியும் பெண்தாதிகளின் செயற்பாட்டைப் பலரும் பாராட்டியுள்ளனர்.

இரத்த வங்கியில் பணிபுரியும் இவர்கள் அவசரமாக இரத்தம் தேவைப்படும் வேளையில் எவரையும், எதனையும் எதிர்பாராமல் தாமாகவே முன்வந்து இரத்ததானம் செய்து முன்மாதிரிதாகத் திகழ்வதாகத் தெரிவிக்கப் படுகிறது.

### இலங்கை...

நேற்று மாலை அமைச்சர் சுக்ளா கொழும்பு வந்து சேர்ந்தார். இவருடன் வெளியுறவு செயலர் முஜ்கந்டுபேயும் கொழும்பு வந்தார். அமைச்சர் சுக்ளா இன்று வெளியுறவு அமைச்சர் ஹேரத், ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத், ரஞ்சன் விஜேரட்ன, ஜே. ஆர். ஜெயவர்தனா ஆகியோரை சந்தித்துப் பேச்சு நடாத்தவுள்ளார்.

---

## காலமானார்

### ஆறுமுகம் குமாரசாமி

(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்)

ஆறுமுகம் குமாரசாமி அவர்கள் 28-01-1991 திங்கட்கிழமை காலமானார். இவர் ஞானரத்தினத்தின் அன்புக் கணவரும், கமலாஜினி, இரத்தின குமார் (ஜேர்மனி), ரஞ்சினி (தனியார் ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் அன்னாரின் பூதவுடல் 29-01-1991 செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணியளவில் நீர்வேலி தெற்கு கிராஞ்சி மயானத்திற்கு ஈமக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

பூதர்மடம்,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி,

தகவல்:
கமலாஜினி (மகள்)

01202

---

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, "லக்ஷ்மிபில்டிங்ஸ்" உள்ள அச்சகத்தில் 29-01-1991இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.